**டிசம்பர் – 02**

# TNPSC துளிகள்

- கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் மூன்று புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைக்கும் தமிழகத்தின் முன்மொழிவிற்கு மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் அமைந்துள்ள டேனிய ஆளுநர் மாளிகையை ஒரு பழங்கால நினைவுச் சின்னமாக நிறுவ தமிழ்நாடு சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் சமய அறநிலையத் துறையானது பரிந்துரை செய்துள்ளது.
    - ஆட்சியர் மாளிகை என்று அழைக்கப்படும் இது டான்ஸ்போர்க் கோட்டைக்கு எதிரே அமைந்துள்ளது. இது டேனியர்கள் இந்தியாவை விட்டு வெளியேறிய பின்னர் 1845 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் கையகப் படுத்தப்பட்டது.
- இந்திய ரயில்வே போக்குவரத்துப் பணியைச் சேர்ந்த நீனு இட்டேராஹ் என்பவர் தெற்கு ரயில்வேயின் முதன்மை தலைமைச் செயல்பாட்டு மேலாளராக (Principal Chief Operations Manager - PCOM) பொறுப்பேற்றுள்ளார்.
    - மண்டல ரயில்வேயில் பதவியேற்க இருக்கும் முதலாவது பெண் அதிகாரி இவராவார்.
- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகத்தால் மாநிலங்களவையில் வழங்கப்பட்ட தரவுகளின் படி, கடைசிகட்ட எண்ணிக்கையில், அசாம் மாநில நதிகளில் 962 கங்கை டால்பின்களும் (அல்லது பிளாட்டானிஸ்டா கங்கெட்டிகா) உத்தரப் பிரதேச மாநில நதிகளில் 1,275 கங்கை டால்பின்களும் இருக்கின்றன.
- முதலாவது இந்திய - ஜப்பான் 2 + 2 வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்திற்காக இந்தியப் பாதுகாப்பு அமைச்சரான ராஜ்நாத் சிங் மற்றும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரான எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் ஜப்பானின் வெளியுறவுத் துறை அமைச்சர் மற்றும் ஜப்பானின் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகியோரை புது தில்லியில் சந்தித்தனர்.
- சோமா ராய் பர்மன் என்பவர் பொது கணக்குக் கட்டுப்பாட்டு ஆணையத்தின் (Controller General of Accounts - CGA) புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.
    - இவர் 24வது CGA ஆவார். இந்தப் புகழ்பெற்ற பதவியை வகிக்கும் ஏழாவது பெண்மணி இவராவார். இவர் ஜே.பி.எஸ் சாவ்லாவுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- நாகாலாந்து மாநிலமானது தனது 57வது மாநில உருவாக்க தினத்தை 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 01 அன்று கொண்டாடியது. இது 1963 ஆம் ஆண்டு டிசம்பர் 01 அன்று நாட்டின் 16வது மாநிலமாக உருவாகியது.
- பிரதான் மந்திரி ஸ்ரம் யோகி மந்தன் மற்றும் வர்த்தகர்கள் & சுயதொழில் செய்பவர்களுக்கான தேசிய ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றின் கீழ் 2020 ஆம் ஆண்டுவாக்கில் ஒரு கோடி பயனாளிகளைச் சேர்க்க மத்திய அரசு "ஒரு இயக்கத்தைத்" தொடங்கியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## குலசேகரபட்டினம் விண்வெளித் தளம்

- செயற்கைக் கோள் ஏவு நடவடிக்கைகள் அதிகரித்து வருவதன் காரணமாக, இஸ்ரோ

அமைப்பானது ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி தளத்திற்கு அடுத்து தனது இரண்டாவது விண்வெளித் தளத்தை தமிழ்நாட்டில் கட்டமைக்கத் தொடங்கியுள்ளது.

- தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசேகரப்பட்டினம் அருகே செயற்கைக் கோள் ஏவுதளத்தை அமைக்கும் திட்டத்தை மத்திய விண்வெளித் துறை அமைச்சரான ஜிதேந்திர சிங் அறிவித்துள்ளார்.
- இது முக்கியமாக புதிதாக மேம்படுத்தப்பட்ட சிறிய செயற்கைக்கோள் ஏவு வாகன (SSLV or mini-PSLV) ஏவுதல்களைப் பூர்த்தி செய்ய இருக்கின்றது.

# தேசியச் செய்திகள்

## தூய்மைக் கலை நடவடிக்கை - கீரியைப் பாதுகாத்தல்

- கீரியின் முடியைக் கடத்துவதைத் தடுக்கக் கூடிய முதலாவது நாடு தழுவிய (இந்தியா) நடவடிக்கையானது சமீபத்தில் நடத்தப்பட்டது.
- “தூய்மைக் கலை நடவடிக்கை” என்ற குறியீட்டுப் பெயர் கொண்ட இந்த நடவடிக்கையானது உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், மகாராஷ்டிரா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டன.
- கீரியின் முடியைக் கொண்டு வண்ணத் தூரிகைகளை உருவாக்கும் தொழிற்சாலைகள் இந்த நடவடிக்கையின் போது குறிவைக்கப்பட்டன.
- இந்தியாவில் ஆறு வகையான கீரி இனங்கள் காணப்படுகின்றன. இந்த நடவடிக்கையின் போது "சாம்பல் நிறக் கீரியின்" முடியானது அதிகளவில் மீட்கப்பட்டது.
- கீரி இனமானது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் அட்டவணை IIன் பகுதி 2ல் பட்டியலிடப்பட்டுள்ளது. மேலும் அதன் உடல் பகுதியைக் கடத்துதல் அல்லது வைத்திருத்தல் என்பது பிணையில் வெளிவர முடியாத குற்றமாகும்.
- இந்த நடவடிக்கையானது வனவிலங்கு குற்றக் கட்டுப்பாட்டு அமைப்பினால் (WCCB - Wildlife Crime Control Bureau) நடத்தப்பட்டது.

**OPERATION CLEAN ART**

| Place | Brushes seized | Accused arrested |
|---|---|---|
| Mumbai | 18,924 | 5 |
| Pune | 3,642 | 3 |
| Sawantwadi | 4,972 | 4 |
| Aurangabad | 1,630 | 3 |
| Total | 29,168 | 15 |



## தேசிய ஸ்டார்ட் அப் விருதுகள் 2020

- மத்திய தொழிற் துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்கமளிப்புத் துறையானது முதலாவது “தேசிய ஸ்டார்ட் அப் விருதுகள்” என்ற விருதுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளதை அறிவித்துள்ளது.
- இந்த விருதுகளானது வேலைவாய்ப்பு உருவாக்கம் அல்லது செல்வத்தை உருவாக்கும் அதிகத் திறன் கொண்ட சிறந்த ஸ்டார்ட் அப் நிறுவனங்களை (புதிதாகத் தொழில் தொடங்குதல்) அங்கீகரிக்க முயல்கின்றன.
- 35 வெவ்வேறு பிரிவுகளில் வெற்றி பெறும் ஸ்டார்ட் அப் நிறுவனத்திற்கு தலா ரூ 5 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்பட இருக்கின்றது.
- இந்த விருதை வெல்லும் ஒரு காப்பகம் மற்றும் ஒரு முடுக்கு நிறுவனம் ஆகியவற்றிற்கு தலா ரூ 15 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்பட இருக்கின்றது.




## இந்தியக் கடற்படையின் விமானப் படைப் பிரிவு 314 (ஐஎன்ஏஎஸ் 314) – ராப்டர்கள்


- இந்திய கடற்படையின் வான்வெளிப் படைப் பிரிவு (Indian Naval Air Squadron – INAS) 314 என்ற ஆறாவது டோர்னியர் விமானப் படைப் பிரிவானது குஜராத் கடற்கரையில் உள்ள போர்பந்தர் கடற்படை வான்வெளிப் பிராந்தியத்தில் இணைக்கப்பட்டது.
- ஐஎன்ஏஎஸ் 314 ஆனது இரை இனப் பறவைக் குடும்பத்திலிருந்து ராப்டர்கள் என்ற பெயரைப் பெற்றது.
- இந்தப் படைப் பிரிவின் சின்னமானது பரந்து, விரிந்த நீல நிறக் கடலில் உலாவும் ‘ராப்டார் பறவையைச்’ சித்தரிக்கின்றது.

- இந்தப் படைப் பிரிவானது பல செயல்பாடுகளைக் கொண்ட டோர்னியர் விமானத்தை இயக்க இருக்கின்றது. இது கான்பூரில் உள்ள இந்துஸ்தான் ஏரோநாட்டிகல் லிமிடெட் என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.




## மெக்ஸிகோவின் சர்வதேசப் புத்தகக் கண்காட்சியில் இந்தியக் காட்சிக் கூடம்

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை இணையமைச்சரான சஞ்சய் தோத்ரே, மெக்ஸிகோ நாட்டின் குவாடல்ஜாராவில் நடத்தப்பட்ட சர்வதேசப் புத்தகக் கண்காட்சியில் இந்தியக் காட்சிக் கூடத்தை திறந்து வைத்தார்.
- இந்தப் புத்தகக் கண்காட்சியில் 'நாட்டின் கௌரவிக்கப்பட்ட விருந்தினர்' நாடாக இந்தியா பங்கெடுத்துள்ளது. இந்தக் கண்காட்சியில் 'கௌரவ விருந்தினராகப்' பங்கேற்ற முதலாவது ஆசிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- ஸ்பானிஷ் மொழி பேசும் மக்களுக்காக நடத்தப்படும் மிகப்பெரிய புத்தகக் கண்காட்சி இதுவாகும்.



### டிஜிட்டல் ஹஜ் புனித யாத்திரை – இந்தியா

- ஹஜ் பயணம் மேற்கொள்ளும் புனித யாத்ரீகர்களுக்கான முழு செயல்முறையையும் முற்றிலும் டிஜிட்டல்மயமாக்கம் செய்த முதலாவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- நிகழ்நேர (ஆன்லைன்) விண்ணப்பம், மின்னணு நுழைவு இசைவு, ஹஜ் கைபேசி செயலி, 'இ-மாசிஹா' சுகாதார வசதி, "மின்னணு முறையிலான பயணச் சுமை குறியிடல்" ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- 2020 ஆம் ஆண்டில் ஹஜ் பயணம் மேற்கொள்ளும் 2 லட்சம் இந்திய முஸ்லிம்கள் மெக்கா மற்றும் மெதினா ஆகிய நகரங்களில் தங்குமிடம் மற்றும் போக்குவரத்து தொடர்பான தகவல்களை இந்தியாவிலேயே பெற இருக்கின்றனர்.
- மத்திய சிறுபான்மை விவகாரத் துறை அமைச்சரான முக்தார் அப்பாஸ் நக்வி என்பவர் இந்தியாவிற்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையிலான இருதரப்பு வருடாந்திர 2020 ஆம் ஆண்டு ஹஜ் ஒப்பந்தத்தில் ஜெட்டாஹ் நகரில் கையெழுத்திட்டார்.

### YuWaah - இளைஞர்களுக்கான யுனிசெஃப் முன்னெடுப்பு

- 1.11.2019 அன்று இந்தியாவில் 'YuWaah' ஜெனரேஷன் அன்லிமிடெட் என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளதாக யுனிசெப் தெரிவித்துள்ளது.
- ஆக்கப்பூர்வமான வாழ்க்கை மற்றும் பணி சார்ந்த எதிர்காலத்திற்கான பொருத்தமான திறன்களைப் பெறுவதற்கு இளைஞர்களுக்கு உதவுவதே YuWaah என்ற முன்னெடுப்பின் நோக்கமாகும்.
- YuWaah முன்னெடுப்பில் இளம் வயதுப் பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோர் இலக்காக உள்ளவர்கள் ஆவர்.
- 2018 ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதத்தில் நியூயார்க்கில் தொடங்கப்பட்ட உலகளாவிய ஜெனரேஷன் அன்லிமிடெட் இயக்கத்துடன் இணைக்கப்பட்ட தனது தேசிய முயற்சியைத் தொடங்கிய உலகின் முன்னணி நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

## சர்வதேசச் செய்திகள்

### ஜி20 அமைப்பின் தலைமைத்துவ நாடு - சவுதி அரேபியா

- ஜி20 அமைப்பின் தலைமைப் பதவியானது ஜப்பானிடமிருந்து சவுதி அரேபியாவிற்குச் சென்றுள்ளது.
- ஜி20 அமைப்பின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்ளும் முதலாவது அரபு நாடாக சவுதி அரேபியா உருவெடுத்துள்ளது.
- மேலும் இது 2020 ஆம் ஆண்டில் அதன் தலைநகரான ரியாத்தில் ஒரு உலக மாநாட்டையும் நடத்த இருக்கின்றது.




# மாநிலச் செய்திகள்

## 20வது இருவாய்ச்சி (ஹார்ன்பில்) திருவிழா, நாகாலாந்து

- இருவாய்ச்சி திருவிழாவின் 20வது பதிப்பானது நாகாலாந்தில் உள்ள நாகா பாரம்பரிய கிசாமாவில் தொடங்கியது.
- நாகாலாந்து அரசால் ஏற்பாடு செய்யப்படும் இந்தத் திருவிழாவானது அம்மாநிலத்தின் பாரம்பரிய மற்றும் வளமான கலாச்சாரப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் ஒரு வருடாந்திர சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வாகும்.
- இந்தத் திருவிழாவின் தொடக்க விழாவானது அம்மாநில ஆளுநரான ஆர்.என்.ரவியினால் தலைமை தாங்கப்பட்டது. இத்திருவிழாவின் போது “நாகாலாந்தின் வண்ணங்கள்” என்ற கருத்துருவுடன் நாகாலாந்தின் கலாச்சாரமானது காட்சிப் படுத்தப்பட்டது.




# விளையாட்டுச் செய்திகள்

## 13வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்


- தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் 13வது பதிப்பானது நேபாளத்தின் காத்மாண்டுவில் உள்ள தசரத் அரங்கில் நடத்தப்பட்ட தொடக்க விழாவிற்குப் பிறகு அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டது.
- நேபாள நாட்டு அதிபரான பித்யா தேவி பண்டாரி என்பவர் இந்த விளையாட்டுகள் தொடங்கப்பட்டதாக அறிவித்தார்.
- தெற்காசிய விளையாட்டுக்கள் (முன்னர் தெற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டு) என்பது தெற்காசியாவைச் சேர்ந்த தடகள விளையாட்டு வீரர்களிடையே இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் பல்வேறு விளையாட்டுகளைக் கொண்ட நிகழ்வாகும்.
- இதுபோன்ற ஒரு முதலாவது போட்டியானது நேபாளத்தில் உள்ள காத்மாண்டு நகரத்தினால் 1984 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.



# முக்கிய தினங்கள்


## உலக எய்ட்ஸ் தினம் - டிசம்பர் 1

- 2019 ஆம் ஆண்டின் உலக எய்ட்ஸ் தினமானது டிசம்பர் 1 ஆம் தேதியன்று "சமுதாயங்கள் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன" என்ற தலைப்பில் அனுசரிக்கப்பட்டது.
- எய்ட்ஸ் தினமானது 1988 ஆம் ஆண்டிலிருந்து அனுசரிக்கப்படுகின்றது.
- 2030 ஆம் ஆண்டளவில் பொது சுகாதார அச்சுறுத்தல் என்ற நிலையிலிருந்து எய்ட்ஸை ஒழிப்பதற்கான நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதற்காக மத்திய அரசானது 2017 முதல் 2024 ஆம் ஆண்டு வரை ஒரு தேசிய உத்திசார் திட்டத்தைச் செயல்படுத்துகின்றது.
- தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டமானது எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றிற்காக நாடு முழுவதும் செயல்படுத்தப்படுகின்றது.




## எல்லைப் பாதுகாப்புப் படையின் எழுச்சி தினம் - டிசம்பர் 1

- எல்லைப் பாதுகாப்பு படையின் (Border Security Force – BSF) 55வது எழுச்சி தினமானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- 1965 ஆம் ஆண்டுப் போருக்குப் பின்னர் இந்திய எல்லைகளில் ஊடுருவல், கடத்தல் மற்றும் இராணுவத் தாக்குதல்கள் ஆகியவற்றிற்கு எதிரான 'முதலாவது பாதுகாப்பு அரணாக' இந்திய எல்லைகளை நிர்வகிப்பதற்கான ஒரு சிறந்த நோக்கத்துடன் BSF ஏற்படுத்தப்பட்டது.
- BSFன் தற்போதைய பொது இயக்குநர் வி.கே. ஜோஹ்ரி ஆவார்.


BSF
BORDER SECURITY FORCE
Celebrates
55th Raising Day
on 1st Dec 2019

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★